Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 157 | உள்ளூர் - 06.06.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 157 | வெளியூர் - 07.06.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

பரிவர்த்தன யோகம்: இந்த ராசிக்காரர்களின் வாழ்க்கையே மாறப்போகுது.. !
"யுபிஎஸ்சி" 451 காலிப்பணியிடங்கள்!
லிட்டருக்கு குறைந்த விலை..! புதிய பெட்ரோல் அறிமுகம்..!!
ஆட்சி நடப்பதே நம் தயவில் தான்? மு.க.ஸ்டாலின்!

# அறம், பொருள், இன்பம் என்ற பெயரில் 436 தொலைநோக்கு செயல் திட்டங்கள்: தமிழக அமைச்சரவை கூட்டத்தில் முடிவு!



சென்னை, ஜூன். 06–

'அறம், பொருள், இன்பம்' என்ற பெயரில், அனைத்து துறைகளிலும் 436 தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்த, தமிழக அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு உள்ளது. முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க., கூட்டணி அமைச்சரவையில், 34 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். முதல் அமைச்சரவை கூட்டம், சென்னை தலைமை செயலகத்தில் நேற்று நடந்தது. காலை 10:05 மணிக்கு துவங்கி, 11:20 வரை நடந்தது. இதில், சட்டம் ஒழுங்கு, போதை பொருட்கள் கட்டுப்பாடு, பருவ மழை முன்னெச்சரிக்கை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

சட்டசபை தேர்தலில், வெற்றி தமிழகம் என்ற பெயரில், த.வெ.க., தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. அதை நிறைவேற்றும் வகையில், பணிகளை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இதற்காக, 'அறம், பொருள், இன்பம்' என்ற பெயரில், 10 அம்ச செயல் திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. 'அறம்' என்ற செயல் திட்டத்தின் கீழ், தமிழ் அடையாளம் மற்றும் அதன் பெருமையை மேம்படுத்த, 52 தொலைநோக்கு திட்டங்களும், மக்களின் கண்ணியமான வாழ்வு மற்றும் சமூக பாதுகாப்பை உறுதி செய்ய, 93 தொலைநோக்கு திட்டங்களும் வகுக்கப்பட்டு உள்ளன.

'பொருள்' என்ற செயல் திட்டத்தின் கீழ், மகளிர் நலன், இளைஞர் நலன், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், மீனவர்கள் நலன், உலக தரத்திலான கல்வி, வளமான தமிழகம் என்ற இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளன. 'இன்பம்' என்ற செயல் திட்டத்தின் கீழ், மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழல், உலகத் தரமான கட்டமைப்பு, மக்கள் அரசு, நேர்மையான நிர்வாகம் ஆகியவை இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு, 54 பிரிவுகளின் கீழ் மொத்தமாக, 436 தொலைநோக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன. துறை வாரியாக, அந்த திட்டங்களை செயல்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. அதற்கான வழிமுறைகள் குறித்து, அமைச்சர்களுக்கு முதல்வர் எடுத்துரைத்தார்.

அமைச்சரவை கூட்டம் முடிந்த பின், மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் கூறியதாவது:

முதல்வர் விஜய் தலைமையிலான முதல் அமைச்சரவை கூட்டம் நடந்து முடிந்துள்ளது. அனைத்து துறைகளிலும் செயல்படுத்த, 436 செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன. மின் துறைக்கு 10 செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன.

அதேபோன்று, ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன. மக்கள் பயன்பெறும் வகையில், இந்த திட்டங்களை செயல்படுத்த, அதிகாரிகளுடன், அமைச்சர்கள் ஆலோசனை செய்து, அதற்கான வழிமுறைகளை உருவாக்க, முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, துறை வாரியாக அமைச்சர்கள் ஆலோசனை செய்து, எவ்வளவு விரைவில் திட்டங்களை செயல்படுத்த முடியும் என்பதை உறுதி செய்வர். அதன்பின், முதல்வரின் ஒப்புதல் பெற்று திட்டங்கள் செயல்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**அமைச்சர்களுக்கு முதல்வர் எச்சரிக்கை**

'மக்களுக்கு வாக்குறுதி அளித்தபடி லஞ்சம், ஊழலற்ற நேர்மையான அரசை நடத்த வேண்டும். இதை மனதில் வைத்து, அனைத்து அமைச்சர்களும் பணியாற்ற வேண்டும். எந்த இடத்திலும் லஞ்சம், ஊழலுக்கு வழிவகுக்க கூடாது' என, அமைச்சரவை கூட்டத்தில், அமைச்சர்களுக்கு முதல்வர் விஜய் அறிவுறுத்தியுள்ளார். 'அமைச்சர்கள் அனைவரும் என் நேரடி கண்காணிப்பில் உள்ளனர். அதை மீறி, ஏதாவது குற்றச்சாட்டுகள் எழுந்தால், ஜெயலலிதா பாணியில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' எனவும், அமைச்சர்களை, முதல்வர் விஜய் எச்சரித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட சாந்தி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## நார்வே செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவுக்கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து!



சென்னை, ஜூன். 06–

நார்வே செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனை படைத்த பிரக்ஞானந்தாவுக்கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். ஒரே தொடரில் நடப்புச் சாம்பியன் மாக்னஸ் கார்ல்செனை 2 முறையும் மற்றும் 4 போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

# ஆட்சி நடப்பதே நம் தயவில் தான்? மு.க.ஸ்டாலின்!



சென்னை, ஜூன். 06–

"இப்போது ஆட்சி நடப்பதே நம்முடைய தயவில் தான்," என முன்னாள் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

செங்கல்பட்டு தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்ட கஜேந்திரன், அவரது ஆதரவாளர்களுடன் திமுகவில் இணைந்தார். இணையும் விழாவில் திமுக தலைவர் ஸ்டாலின் பேசியதாவது: எப்பொழுதும் ஒரு இயக்கத்தில் இருந்து இன்னொரு இயக்கத்திற்கு பிரிந்து போகிறார்கள் என்று சொன்னால் ஏதோ ஒரு லாபத்தை அடிப்படையாக வைத்து, ஏதாவது வசதியை மனதில் கொண்டு ஆளுங்கட்சியை நோக்கி தான் போவது உண்டு.

இன்றைக்கு திமுக ஆளுங்கட்சியாக இருந்து எதிர்க்கட்சியாக மாறி இருக்கிறது. எதிர்க்கட்சியை நோக்கி வந்து இருக்கிறீர்கள் என்று சொன்னால் பதவிக்காக நீங்கள் வரவில்லை. சொகுசாக வாழ வேண்டும் என்பதற்காக வரவில்லை, பணியாற்ற வேண்டும் இந்த இயக்கத்திற்கு துணை நிற்க வேண்டும்.

**வெற்றி, தோல்வி**

தமிழ் சமுதாயத்திற்கு பாடுபட வேண்டும், இழந்து இருக்கும் ஜனநாயகத்தை மீட்க வேண்டும் என்ற உணர்வோடு வந்து இருக்கிறீர்கள். திமுகவை பொறுத்தவரை வெற்றி, தோல்வி என்பது மாறி மாறி வரும். அதற்காக வெற்றியை கண்டு என்றைக்கு வெறி கொண்டு அலைந்து இருப்பது இல்லை.

தோல்வியை கண்டு என்றைக்கும் துண்டு விடமால் பணியாற்ற கூடியவர்கள் திமுகவினர் என்பதை நிரூபித்துக்கொண்டு இருக்கிறோம். வெற்றி வாய்ப்பை நாம் இழந்து இருந்தாலும் ஆட்சி பொறுப்பை நாம் இழந்து இருந்தாலும் எதிர்க்கட்சி என்ற நிலையில் பணியாற்றிக்கொண்டு இருக்கிறோம்.

**முற்றுப்புள்ளி**

இப்போது ஆட்சி நடப்பதே நம்முடைய தயவில் தான். நமது கூட்டணி கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது. நமது கூட்டணி கட்சி தலைவர்கள் சொல்லிவிட்டு போகும் போது நான் சொன்னேன், 'செல்லுங்கள் உங்களுடைய விருப்பம், ஜனநாயகத்தை நான் தடுக்க மாட்டேன்.

நாட்டில் ஜனாதிபதி ஆட்சி வந்து விடக்கூடாது; அதன் அடிப்படையில் பாஜ வந்துவிடக்கூடாது' என்பதற்கு தான், வழியனுப்பி வைத்தேன். நமது தயவோடு நடைபெறும் இந்த ஆட்சிக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க நாம் உறுதியேற்று பணியாற்றுவோம். இவ்வாறு ஸ்டாலின் கூறினார்.

# ஜூன் 18–ந் தேதி முதல்வர் விஜய் அரசின் முதல் பட்ஜெட் தமிழக ஆளுநர் அர்லேகர் உரையுடன்

## முக்கிய அறிவிப்புகள்? தயாராகும் எதிரணியினர்!!




சென்னை, ஜூன். 06–

முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசின் முதல் அமைச்சரவை கூட்டம் ஜூன் 05–ந் தேதிநடந்தது. இதன் பின்னர் சட்டமன்ற தொடர் குறித்த அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. அந்த வகையில் தவெக அரசின் முதல் சட்டசபை கூட்டம் ஜூன் 18–ந் தேதி காலை 10 மணிக்கு தொடங்க இருக்கிறது. இதற்கான அறிவிப்பை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் வெளியிட்டார்.

முதல் நாள் கூட்டத்தில், தமிழக ஆளுநர் அர்லேகர் உரையாற்ற இருக்கிறார். ஆங்கிலத்தில் இடம்பெறும் அவரது உரையில் முக்கிய அறிவிப்புகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து, ஆளுநரின் உரையை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தமிழில் வாசிப்பார்.

அடுத்த 2 நாட்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெறும். இதில், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பங்கேற்று பேசுவார்கள்.

2026–2027–ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. பட்ஜெட்டில், தவெக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றும் திட்டங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக சட்டசபை நிகழ்வுகள் அனைத்தும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட இருக்கிறது. எதிர்க்கட்சிகள் பல்வேறு விவகாரங்களை எழுப்பும் என சொல்லப்படுகிறது.2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சர் விஜய் தலைமையிலான கூட்டணி ஆட்சி நடந்துவருகிறது. தவெக ஆட்சி அமைக்க ஆதரவு கரம் நீட்டிய காங்கிரஸ், விசிக, ஐயூஎம்எல் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்பட 35 பேர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். எதிர்க்கட்சிகளாக திமுக, அதிமுக ஆகியவை சட்டப்பேரவையில் பல கேள்விகளை எழுப்ப தயாராகி வருகின்றன.

இந்தாண்டு தொடக்கத்தில் திமுக ஆட்சியில் 2026 –27 ஆம் நிதியாண்டுக்கான இடைக்கால நிதிநிலை தாக்கல் செய்யப்பட்ட நிலையில், தவெக அரசில் நிகழாண்டுக்கான முழு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும். இது தவெக அரசு தாக்கல் செய்யும் முதல் முழு நீள பட்ஜெட்டாக இருக்கும். பெண்களுக்கு 2500 ரூபாய் உதவி தொகை, திருமணத்தின் போது தங்கம் சீர் வழங்கும் திட்டம், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம், பெண்களுக்கு இலவச பேருந்து திட்டம் உள்ளிட்டவை குறித்த அறிவிப்புகள் வெளியாக வாய்ப்புள்ளது.

# த.வெ.க.வில் இணைந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள்!



சென்னை, ஜூன். 06–

சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. அதிக இடங்களில் வெற்றி பெற்று தமிழகத்தின் முதலமைச்சராக விஜய் பதவி ஏற்றுள்ளார். இதைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து தமிழக வெற்றிக் கழகத்தில் இணைவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தி.மு.க., அ.தி.மு.க.வில் இருந்து நிர்வாகிகள் ஏராளமானோர் த.வெ.க.வில் இணைந்து வருகின்றனர்.

பொதுச்செயலாளர் என்.ஆனந்த் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் அலுவலகங்களில் தினந்தோறும் ஏராளமானோர் த.வெ.க.வில் இணைவதற்கு திரண்டு வருகின்றனர். அதிலும் அ.தி.மு.க.வில் இருந்து த.வெ.க.வில் அதிக எண்ணிக்கையில் இணைந்து வருகின்றனர். கட்சியில் சேருவதற்காக கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான என்.ஆனந்தை தினமும் ஆயிரக்கணக்கானோர் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

சமீபத்தில் அமைச்சர் என்.ஆனந்த் முன்னிலையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன், முன்னாள் எம்.எல்.ஏ.வும் முன்னாள் டி.ஜி.பி.யுமான நட்ராஜ் த.வெ.க.வில் இணைந்தனர்.

அ.தி.மு.க.வில் இருந்து அணி அணியாக த.வெ.க. வில் பலர் இணைந்து வருவது அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது மட்டுமின்றி நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இசக்கி சுப்பையா, மரகதம் குமரவேல், பி. சத்தியபாமா, ஜெயக்குமார் ஆகியோர் தங்களது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து விட்டு த.வெ.க.வில் இணைந்தனர்.

இந்த நிலையில் அ.தி.மு.க. ஆட்சியில் முன்னாள் அமைச்சர்களாகவும், முக்கிய நிர்வாகிகளாகவும் இருந்த எம்.சி.சம்பத், கடம்பூர் ராஜூ, உடுமலை ராதாகிருஷ்ணன் உள்பட சுமார் 10 ஆயிரம் பேர் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி த.வெ.க. பொதுச்செயலாளரும், அமைச்சருமான என்.ஆனந்த் முன்னிலையில் த.வெ.க.வில் இணைந்தனர்.

கடலூர் மாவட்டத்தை சேர்ந்த எம்.சி.சம்பத், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த உடுமலை ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கடம்பூர் ராஜூ உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து முக்கிய தலைவர்கள் அ.தி.மு.க.வில் இருந்து விலகி த.வெ.க.வில் இணைந்து வருவது அ.தி.மு.க.வில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பனையூரில் உள்ள த.வெ.க. தலைமை அலுவலகத்தில் இன்று நடந்த பிரமாண்ட இணைப்பு விழாவில் அ.தி.மு.க.வை சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் உள்பட முக்கிய நிர்வாகிகள் ஒரே நேரத்தில் கூண்டோடு விலகி த.வெ.க.வில் இணைந்ததால் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் விரைவில் அடுத்தக்கட்ட இணைப்பு விழா அடுத்த வாரம் நடைபெற இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 06.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 23-ம் தேதி

# அண்ணாமலை!! ஐபிஎஸ் முதல் அரசியல் வரை...!




தமிழ்நாடு அரசியல் களம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பரபரப்பை சந்தித்து வருகிறது. தேர்தல் முடிவுகள் ஒரு புது விதமாக அமைத்து பரபரப்பை கிளப்பியது என்றால் அதன் பின்னர் அதிமுகவில் நடந்த சம்பவங்கள் அரசியல் களத்தை இன்னும் பரபரப்பாக்கின. இந்த சூழலில் புதிதாக ஒரு புயல் கிளம்பியுள்ளது. தமிழ்நாட்டில் பாஜகவின் அடையாளமாக திகழ்ந்த அண்ணாமலை தற்போது அந்த கட்சியில் இருந்து விலகி புது கட்சி தொடங்குவதாக அறிவித்துள்ளார்.

கரூர் மாவட்டத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கர்நாடகாவில் அதிரடி ஐபிஎஸ் அதிகாரியாக வலம் வந்தவர் அண்ணாமலை. திடீரென தன் பதவியை ராஜினாமா செய்து பாஜகவில் இணைந்தார். பின்னர் தமிழக அரசியல் களத்தில் முக்கியத் தலைவராக உருவெடுத்த அண்ணாமலையின் அரசியல் பயணம் பல சுவாரஸ்யங்களை கொண்டுள்ளது. கரூர் மாவட்டம் தொட்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த குப்புசாமி – பரமேஸ்வரி தம்பதியரின் மகன் தான் அண்ணாமலை, கோவையில் பொறியியல் படிப்பை முடித்த அவர் புகழ்பெற்ற இந்திய மேலாண்மைப் பல்கலைக்கழகத்தில் எம்பிஏ பட்டம் பெற்றார். 2011–ஆம் ஆண்டில் சிவில் சர்வீசஸ் தேர்வில் தேர்ச்சி பெற்று, ஐபிஎஸ் அதிகாரியாகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். கர்நாடகாவின் உடுப்பி மாவட்டத்தில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளராகப் பணியைத் தொடங்கிய அவர், கல்வி நிறுவனங்களில் போதைப்பொருள் விற்பனையைத் தடுத்தல், இரவு நேர ரோந்து எனச் சட்டவிரோத செயல்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதனால் பொதுமக்கள் மத்தியில் ''கர்நாடக சிங்கம்'' என அழைக்கப்பட்டார். உடுப்பி மற்றும் சிக்மளூரு மாவட்ட எஸ்பி–யாகவும், பெங்களூர் தெற்கு மாவட்ட துணை ஆணையராகவும் பணியாற்றினார். ஒரு முறை கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்குச் சென்றபோது ஏற்பட்ட மனமாற்றம் மற்றும் சக அதிகாரியின் மறைவு தந்த சுயபரிசோதனை காரணமாக, மே 2019இல் தனது ஐபிஎஸ் பதவியை ராஜினாமா செய்தார். அதன் பின்னர், அரசியலைத் தூய்மைப்படுத்தும் நோக்கில் 'வீதி லீடர்' என்ற அமைப்பைத் தொடங்கிச் சமூகப் பணியாற்றினார். மேலும் இயற்கை விவசாயம், நாட்டு மாடுகள் வளர்ப்பு ஆகியவற்றிலும் ஈடுபாடு காட்டினார். ரஜினிகாந்த் கட்சி தொடங்குவதாக அறிவிக்கப்பட்ட போது அண்ணாமலையை அழைத்தார். ஆனால் அதனை ஏற்காமல் 2021–ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக பாஜகவில் இணைந்து, தமிழக பாஜக தலைவராகப் பொறுப்பேற்றார்.

இவரது தலைமையிலேயே தமிழக பாஜக 2024 மக்களவைத் தேர்தலை எதிர்கொண்டது. சட்டசபை தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு பாஜக மாநிலத்தலைவர் பொறுப்பில் இருந்து அண்ணாமலை நீக்கப்பட்டார். அதிமுகவுடன் கூட்டணி வைப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக, அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டது. இந்நிலையில் தேர்தல் களத்தில் அண்ணாமலை பட்டும்படாமலேயே இருந்தார். அவர் பாஜகவில் இருந்து விலக போகிறார் என தகவல்கள் வெளியாகின. அதற்கேற்ப தேசிய தலைவர் நிதின் நபினை சந்தித்து 5 பக்க கடிதத்தையும் அளித்தார். தொடர்ந்து. மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவையும், தேசிய பொதுச்செயலாளர் பி.எல். சந்தோஷையும் அவர் சந்தித்து பேசினார்.

இந்நிலையில்,வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்ட அண்ணாமலை, பாஜகவில் இருந்து விலகி புதிய அரசியல் கட்சி தொடங்குவதாக அறிவித்தார். புதிய அரசியல், புதிய பாதை, புதிய இயக்கம் இன்று முதல் தொடங்குகிறது. என்னுடைய கருத்துக்கு பாஜக தலைமை செவிசாய்க்கவில்லை. எதிர்காலத்தை நோக்கி பயணப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. எதிர்காலம் என்னை அழைத்துச் செல்லும் பாதையில் பயணிக்க வேண்டிய நேரம் இது. ஒரு புதிய அரசியலை, அடிப்படை கட்டமைப்பை மாற்றக் கூடிய அரசியலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பாஜகவில் இருந்து ராஜினாமா செய்தேன் என கூறியுள்ளார்.

என்னுடைய பாதை வேறு என பாஜக மேலிடத்திடம் தெரிவித்துள்ளேன். தமிழர் பண்பு என்பதால் பாஜக மேலிடம் கூற டெல்லி வந்துள்ளேன். புதிய அரசியல் இயக்கம் என முடிவெடுத்துள்ளேன். அரசியலில் புதிய பாதையை உருவாக்க 17 ஆண்டுகளாக போராடுகிறேன். தேசிய கட்சிகளின் மொழி தமிழ்நாடு மக்களுக்கு புரியவில்லை. தேசிய கட்சிகள் ஒரு போதும் தமிழ்நாட்டு மக்களுக்கு புரியும் மொழியில் பேசுவதில்லை, தமிழ்நாட்டு மக்களுக்கு புரியும் வகையில் பேச முடியும் என நான் கடுமையாக முயற்சி செய்து குறிப்பிட்ட அளவில் வெற்றி பெற்றேன்'' என்று தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் அடுத்து நடக்கும் தேர்தலில் தன்னுடைய கட்சி போட்டியிடும் என அண்ணாமலை கூறியுள்ளார். 18 மாதங்களாக தனக்கும் பாஜகவுக்கும் இடையே கருத்து வேறுபாடு நீடிக்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியல் களத்தில் விஜய் புதுப்பாதையை வகுத்து, இளம் தலைமுறையினரின் ஆதரவுடன் ஆட்சி கட்டிலில் அமர்ந்து இருக்கிறார். இந்த சூழலில், தமிழக அரசியலில் புது சக்தியாகவும் உருவெடுத்து வந்த அண்ணாமலை தற்போது புதுக்கட்சியை தொடங்கி அரசியல் களத்தில் புதிய ஆட்டத்தை தொடங்க உள்ளார். அண்ணாமலை பொறுத்தவரை 2024 லோக்சபா தேர்தலில் போட்டியிட்ட போது தனக்கு 4.07 கோடி ரூபாய் சொத்து இருப்பதாக தெரிவித்துள்ளார்.

# உலக அளவில் பாதுகாப்பற்ற உணவால் ஆண்டுதோறும் 86.6 கோடி பேர் பாதிப்பு - 15 லட்சம் பேர் உயிரிழப்பு!



ஜெனிவா, ஜூன். 06–
உலக சுகாதார அமைப்பு 194 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள், மருத்துவ ஆய்வு இதழான தி லான்செட்–ல் வெளியிடப்பட்டுள்ளன. அதில் கூறியிருப்பதாவது:–

உலக மக்கள் தொகையில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் வெறும் 9 சதவீதம் மட்டுமே இருந்தாலும், உணவால் பரவும் நோய்களின் மூன்றில் ஒரு பங்கு இவர்களிடமே பதிவாகியுள்ளது. பெரியவர்கள் மற்றும் வயதான குழந்தைகளை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாக சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

சால்மோனெல்லா, நோரோ வைரஸ், காலரா, ரோட்டா வைரஸ், கிரிப்டோஸ்போரிடியம் போன்ற பாக்டீரியா, வைரஸ் மற்றும் ஒட்டுண்ணிகளால் ஏற்படும் வயிற்றுப்போக்கு நோய்களே உணவால் பரவும் நோய்களின் முக்கிய காரணமாக உள்ளன. குறிப்பாக இளம் குழந்தைகளுக்கு நீரிழப்பு வேகமாக ஏற்படுவதால் இந்த நோய்கள் உயிரிழப்பையும் ஏற்படுத்தக்கூடும்.

ஒவ்வொரு ஆண்டும் பாக்டீரியா, வைரஸ் மற்றும் ஒட்டுண்ணிகளால் ஏற்பட்ட உணவு மாசுபாடு காரணமாக சுமார் 86.6 கோடி பேர் நோய்வாய்ப்பட்டு உள்ளனர். 15 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். உணவு மாசுபாட்டால் ஏற்படும் உயிரிழப்புகளில் 73 சதவீதம் வேதியியல் மாசுபாடுகளால் ஏற்பட்டவை ஆகும். அதில் கனிம ஆர்சனிக் மட்டும் 42 சதவீத உயிரிழப்புகளுக்கும், ஈயம் 31 சதவீத உயிரிழப்புகளுக்கும் காரணமாக இருந்துள்ளது.

இந்த 2 உலோகங்களும் ஆண்டுக்கு 10 லட்சத்துக்கும் அதிகமான உயிரிழப்புகளுடன் தொடர்புடையதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதய நோய் மற்றும் புற்றுநோய் பாதிப்புகளே இதற்கான முக்கிய காரணங்களாக உள்ளன. மாசுபட்ட உணவுகளில் உள்ள ஈயம் மற்றும் மெத்தில் பாதரசம் குழந்தைகளின் மூளை வளர்ச்சியை பாதித்து, வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் நரம்பியல் மற்றும் வளர்ச்சிக் குறைபாடுகளை ஏற்படுத்தும் அபாயம் இருக்கிறது.

உலகளவில் பதிவாகும் உணவால் பரவும் நோய்களில் கிட்டத்தட்ட 75 சதவீதமும், உயிரிழப்புகளில் 60 சதவீதமும் ஆப்பிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே பதிவாகியுள்ளன. கடந்த 2000–ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது மொத்த பாதிப்பு குறைந்திருந்தாலும், உயர் வருமான நாடுகளுக்கும் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி இன்னும் குறையவில்லை. காலநிலை மாற்றமானது உணவு மாசுபாட்டு அபாயத்தை மேலும் அதிகரித்து வருகிறது. மேலும் நுண்ணுயிர் எதிர்ப்பு திறன் அதிகரிப்பதால் பாக்டீரியா தொற்றுகளுக்கு சிகிச்சை அளிப்பது சவாலாக மாறியுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தொழில், வணிக வளர்ச்சியால் வங்கிக் கடன் பெறுவதில் தமிழ்நாடு முதலிடம்!



சென்னை, ஜூன். 06–
இந்தியாவில் வங்கிக் கணக்குகள், டிஜிட்டல் பரிவர்த்தனைகள் உள்ளிட்டவை வேகமாக வளர்ந்து வரும் நிலையில், வங்கிக் கடன் பெறுவதில் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதாக புதிய ஆய்வுத் தகவல் வெளியாகியுள்ளது.

ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள மாவட்ட வாரியான கடன் மற்றும் வைப்புத் தொகை தரவுகளை அடிப்படையாகக்கொண்டுவெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வில் கூறியிருப்பதாவது:–

நாட்டின் மொத்த வங்கிக் கடனில் 27.76 சதவீத பங்கு தமிழ்நாட்டுக்கே செல்கிறது என்பது தெரிய வந்துள்ளது. மாநில வாரியாக கணக்கிடப்பட்ட தேசிய கடன் சதவீதத்தில், தமிழ்நாடு 27.76 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது.

அதற்கு அடுத்தபடியாக மராட்டியம் 27.70 சதவீதத்துடன் 2–வது இடத்தில் உள்ளது. கர்நாடகா 8.81 சதவீதம், குஜராத் 5.64 சதவீதம், தெலுங்கானா 5.12 சதவீதம் என்ற அளவில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்த 5 மாநிலங்களே நாட்டின் மொத்த வங்கிக் கடனில் 75 சதவீதத்துக்கும் அதிகமான கடனை பெறுகின்றன.

தொழில், வணிக வளர்ச்சி

தமிழ்நாட்டின் இந்த முன்னணிக்கு சென்னை, கோவை, திருப்பூர், ஓசூர், சேலம், திருச்சி உள்ளிட்ட தொழில் மற்றும் வணிக மையங்களின் வளர்ச்சியே முக்கிய காரணமாக கருதப்படுகிறது. வாகன உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், ஜவுளி ஏற்றுமதி, தோல் பொருட்கள், பொறியியல் தொழில்கள், சிறு மற்றும் நடுத்தர தொழில்கள், துறைமுக வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முன்னணியில் இருப்பதால், தொழில் மற்றும் வர்த்தகக் கடன்களுக்கான தேவை அதிகமாக உள்ளது.

2015–ம் ஆண்டு முதல் பிரதமரின் ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 54 கோடிக்கும் மேற்பட்ட புதிய வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 60 சதவீதம் பெண்களின் பெயரில் உள்ளன. யூ.பி.ஐ. மூலம் தினசரி 70 கோடிக்கும் அதிகமான டிஜிட்டல் பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன. ஆனால், வங்கிக் கடன் வினியோகம் நாடு முழுவதும் சமமாக பரவவில்லை என்பது ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்பாகும்.

**762 மாவட்டங்கள்**

2025–26–ம் நிதியாண்டின் 3–வது காலாண்டு நிலவரப்படி, நாட்டின் 762 மாவட்டங்களில் வெறும் 11 மாவட்டங்கள் மட்டும் இந்தியாவின் மொத்த வங்கிக் கடனில் 50 சதவீதத்துக்கும் அதிகமான கடனை பெற்றுள்ளன. அதில் மும்பை, மும்பை புறநகர் மற்றும் புதுடெல்லி ஆகிய 3 மாவட்டங்கள் மட்டும் 30.3 சதவீத கடனைப் பெற்றுள்ளன.

மேலும், முதல் 7 மாவட்டங்கள் சேர்ந்து 43.4 சதவீத கடனைப் பெற்றுள்ளன. மறுபுறம், நாட்டின் கீழ்மட்ட 381 மாவட்டங்கள் சேர்ந்து வெறும் 4.9 சதவீத கடனை மட்டுமே பெற்றுள்ளன. இவ்வாறு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

# ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை தமிழக அரசு கைவிடுகிறது!




சென்னை, ஜூன். 06–
வீடுகளில் ஆளில்லாமல், மின் பயன்பாட்டை கணக்கெடுக்கும், 'ஸ்மார்ட் மீட்டர்' திட்டத்தை கைவிட, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் வீடுகளில், மின் பயன்பாட்டை கணக்கு எடுக்க, மீட்டர் பொருத்தப்பட்டுள்ளது.சில பணியாளர்கள் நேரில் செல்லாமல், கணக்கு எடுப்பதால், நுகர்வோர் பாதிக்கப் படுகின்றனர். எனவே, ஆளில்லாமல் மின் பயன்பாட்டை கணக்கெடுக்க, 'ஸ்மார்ட் மீட்டர்' பொருத்த, மின் வாரியம் முடிவு செய்தது. அந்த மீட்டரில், மின் பயன்பாடு கணக்கு எடுக்கப்பட வேண்டிய தேதி, மென்பொருளில் பதிவேற்றப்படும். தொலை தொடர்பு வசதியை ஏற்படுத்தி, தானாகவே கணக்கு எடுத்து, மின் கட்டண விபரம், நுகர்வோரின் மொபைல் போன் எண்ணுக்கு அனுப்பப்படும்.


ஆறு தொகுப்புகளாக, 3.04 கோடி 'ஸ்மார்ட் மீட்டர்' பொருத்தி, 93 மாதங்களுக்கு பராமரிக்கும் வகையில், ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய, 2025 மார்ச்சில், 'டெண்டர்' கோரப் பட்டது. திட்ட செலவு, 20,000 கோடி ரூபாய். டெண்டரில், 50 நிறுவனங்கள் பங்கேற்ற நிலையில், அவை வழங்கிய தொழில் நுட்பப்புள்ளி, அந்த ஆண்டு இறுதியில் திறக்கப்பட்டன.

இந்த விபரங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டு, விலைப்புள்ளி திறக்க அனுமதி கேட்கப்பட்டது. சட்டசபை தேர்தலுக்கு பின், விலைப் புள்ளி திறக்க திட்டமிடப்பட்டது. தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியை பிடித்து, முதல்வராக விஜய் பதவியேற்றுள்ளார்.

முறைகேடு புகாரை அடுத்து, மின் வாரியத்தில், இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து அறிவிக்கப்பட்ட, 2,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான, 'டெண்டர்'கள் ரத்து செய்யப்பட்டன.

வீடுகளுக்கு 200 யூனிட் இலவச மின்சார திட்டத்தால், அரசுக்கு செலவு அதிகரித்துள்ளது. எனவே, நிதி நெருக்கடியை சமாளிக்கும் வகையில், தற்போது, 'ஸ்மார்ட் மீட்டர்' திட்டத்தை கைவிட, அரசு முடிவு செய்துள்ளது.

# புதிய இயக்கம் தொடங்கினார் நடிகர் ரஜினி மனைவி லதா!




சென்னை, ஜூன். 06–
நடிகர் ரஜினியின் மனைவி லதா, 'மக்கள் மேடை – மக்கள் இயக்கம்' என்ற அமைப்பை திடீரென தொடங்கி உள்ளார்.

நடிகர் ரஜினி அரசியலுக்கு வருவதாக அறிவித்து, கொரோனாவை காரணம் காட்டி பின்வாங்கினார். இந்நிலையில், அவரது மனைவி லதா, புதிய மக்கள் இயக்கம் ஒன்றை தொடங்கி உள்ளார்.

இதுகுறித்து, அவர் கூறி உள்ளதாவது: மக்கள் மேடை – மக்கள் இயக்கத்துடன் இணைந்து, தமிழகத்துக்காக பணியாற்ற நினைப்பவர்கள், எங்களுடன் ஒன்றாக சேரலாம். பெரிய மக்கள் சேவையாக, மக்கள் சக்தியாக உருவாகி, இந்த மாநிலத்துக்கு பல நன்மைகளை சேர்க்க வாருங்கள். ஒன்றாக சேருவோம்; ஆக்கப்பூர்வமான காரியங்களை செய்வோம். சாமானிய மக்கள் யாராக இருந்தாலும், நல்ல திட்டங்கள், நல்ல எண்ணம், மனம் கொண்டவர்கள் யாராக இருந்தாலும், தமிழகத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என நினைப்பவர்கள், எங்களை தொடர்பு கொள்ளலாம்.

மேலும், ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள், ஐ.பி.எஸ்., அதிகாரிகள், அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள் உட்பட பல்வேறு அறிஞர்கள், தங்களின் அனுபவங்களை எங்களுக்கு வழங்கலாம். எங்களை தொடர்பு கொண்டு, தமிழகத்துக்காகவும், தொகுதிக்காகவும் நீங்கள் பணியாற்றலாம்.

நாங்கள், மாநிலத்துக்காக பணியாற்றும் உள்ளூர் தலைவர்களை உருவாக்க நினைக்கிறோம். இங்கு பல்வேறு வளங்கள், யோசனைகள், பலம் உள்ளன. அவற்றை மாநிலத்துக்கு வழங்குவதற்காக மக்கள் தயாராக உள்ளனர். அனைத்து தரப்பு மக்களும் எங்களுடன் வாருங்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# பரிவர்த்தன யோகம்: இந்த ராசிக்காரர்களின் வாழ்க்கையே மாறப்போகுது....!




ஜோதிட சாஸ்திரத்தில், 'பரிவர்த்தன யோகம்' (Parivatan Yoga) என்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதில், சுப கிரகங்களுக்கு இடையிலான பரிமாற்றத்திற்குச் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பரிவர்த்தனை யோகம் நிச்சயமாகச் சுப பலன்களையே அளிக்கும். இந்த மாதத்தின் (ஜூன்) 9, 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில், உச்ச நிலையில் உள்ள குரு பகவானுக்கும், மீன ராசியில் சஞ்சரிக்கும் சந்திரனுக்கும் இடையே ஏற்படும் பரிவர்த்தன யோகம், மேலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

குரு பகவான் சந்திரனுக்குரிய கடக ராசியிலும், சந்திரன் குருவுக்குரிய மீன ராசியிலும் சஞ்சரிப்பதாலேயே, இந்தச் சிறப்பான பரிவர்த்தனை யோகம் உருவாகிறது. மிதுனம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் மற்றும் மீனம் ஆகிய ராசிகளில் பிறந்தவர்களுக்கு, இந்த யோகத்தின் தொடர்பில் வரும் அனைத்தும் பொன்னாகப் பிரகாசிக்கும்.

**மிதுனம்:** குரு மற்றும் சந்திரனின் இந்தச் சஞ்சாரம், இந்த ராசிக்காரர்களுக்குச் சிறப்பான பலன்களை அளிக்கும். குருவும் சந்திரனும் முறையே 4–ஆம் வீடு மற்றும் 10–ஆம் வீட்டில் சஞ்சரித்து பரிவர்த்தனை செய்துகொள்வதால், வருமானம் இரட்டிப்பாக உயரும் வாய்ப்புள்ளது. பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்கும். நிதி மற்றும் சொத்து சார்ந்த விவகாரங்கள் அனைத்தும் முழுமையாகச் சாதகமாக அமையும். உடல் ஆரோக்கியம் வெகுவாக மேம்படும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாகவும், சீராகவும் நடைபெறும். வீட்டில் சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்புள்ளது. வேலையில்லாதவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து வேலைவாய்ப்புகள் வந்து சேரும்.

**கடகம்:** இந்த ராசியில் குரு பகவான் உச்ச நிலையில் இருப்பதும், ராசி அதிபதியான சந்திரனுடன் சாதகமான நிலையில் இணைந்து சஞ்சரிப்பதும், வாழ்க்கையில் முக்கியமான சுப மாற்றங்களை ஏற்படுத்தும். நீங்கள் பல நற்செய்திகளைக் கேட்பீர்கள். எதிரிகள், நோய்கள் மற்றும் கடன் தொல்லைகள் ஆகியவை பெரும்பாலும் மறைந்துவிடும். வருமானம் கணிசமாக உயரும். தனிப்பட்ட பிரச்சனைகள் பெரும்பாலும் தீர்க்கப்படும். உயர் பதவிகளில் இருப்பவர்களுடன் தொடர்புகள் ஏற்படும். தொழில், வேலை மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் வருமானம் அதிகரிக்கும்.

**கன்னி:** இந்த ராசிக்கு 7–ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் சந்திரன், சுப ஸ்தானத்தில் (9–ஆம் வீட்டில்) இருக்கும் குருவுடன் பரிவர்த்தனை செய்துகொள்வது 'ராஜ பூஜ்ய யோகத்தை' (அரசருக்கு இணையான கௌரவத்தை) பெற்றுத்தரும். தொழில் மற்றும் பணித்துறையில் பல நன்மைகள் உண்டாகும். வேலையில் பதவி உயர்வு கிடைப்பதற்கான நல்ல வாய்ப்புகள் உள்ளன. தற்போதுள்ள வேலையை விடச் சிறந்ததொரு வேலைக்கு மாறுவதற்கான வாய்ப்பும் உள்ளது. வேலையில்லாதவர்களுக்கு எதிர்பாராத வகையில் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் எடுக்கும் எந்தவொரு முடிவும், நீங்கள் விரும்பிய பலன்களையே அளிக்கும். சொத்துக்கள் சேரும். சொத்துக்களின் மதிப்பும் கணிசமாக உயரும்.

**விருச்சிகம்:** இந்த ராசிக்கு பாக்கிய ஸ்தானத்தில் (9–ஆம் வீட்டில்) சஞ்சரிக்கும் குரு பகவான், 5–ஆம் வீட்டில் இருக்கும் சந்திரனுடன் பரிவர்த்தனை செய்துகொள்வது, எதிர்பாராத 'ராஜ யோகங்களை' (அரசருக்குரிய யோகங்களை) பெற்றுத்தரும். பணியில் இருப்பவர்களுக்கும், வேலையில்லாதவர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து வேலைவாய்ப்புகள் வந்து சேரும். பங்குகள் மற்றும் ஊக வணிகம் உள்ளிட்ட பல வழிகளிலிருந்து வருமானம் அதிகரிக்கும். பணியிடத்தில் ஊதியம் மற்றும் படிகள் கணிசமாக உயரும்; அத்துடன் பதவி உயர்வும் கிடைக்கும். உயர்குடும்பத்தைச் சேர்ந்தவருடன் திருமணம் நடைபெறும் வாய்ப்பு உள்ளது. உடல்நலக் குறைபாடுகளிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.


**மகரம்:** மூன்றாம் வீட்டில் சந்திரன் சஞ்சரிப்பதாலும், ஏழாம் வீட்டில் குரு வீற்றிருப்பதாலும், இந்த ராசிக்காரர்களுக்கு நிகழும் அனைத்தும் பொன்னாக மாறும். இதன் விளைவாக, வேலைவாய்ப்பில் மட்டுமல்லாமல், சுயதொழில் மற்றும் வணிகத்திலும் வருமானம் பெருகுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. இவர்கள் தங்கள் பணி சார்ந்த முயற்சிகளில் பெரும் வெற்றியை அடைவார்கள். இவர்களுக்கு வெளிநாட்டு வாய்ப்புகளும் வந்து சேரும். தனிப்பட்ட மற்றும் நிதி சார்ந்த சிக்கல்களிலிருந்து இவர்களுக்கு விடுதலை கிடைக்கும். இவர்களின் வருமானம் கணிசமாக உயரும். வீடு மற்றும் வாகன யோகங்கள் கைகூடும்.

**மீனம்:** இந்த ராசியின் அதிபதியான குருவிற்கும், ஐந்தாம் வீட்டின் அதிபருக்கும் இடையிலான சஞ்சார நிலை காரணமாக, இந்த ராசிக்காரர்களுக்கு ராஜயோகப் பலன்கள் கிட்டும். ராஜயோகங்களும், தனயோகங்களும் உண்டாகும். வருமானம் கணிசமாக அதிகரிக்கும். திடீர் செல்வச் சேர்க்கைக்கான வாய்ப்புகள் உள்ளன. சொத்து மற்றும் நிதி சார்ந்த விவகாரங்கள் லாபகரமாக அமையும். பணியிடத்தில் வெற்றி வாய்ப்புகள் பெருகும். தொழில் மற்றும் வணிகம் சார்ந்த பணிகள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெறும். உடல் ஆரோக்கியம் மேம்படும். லாபம் தரக்கூடிய புதிய தொடர்புகள் உருவாகும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### சிறுநீரக செயல் இழப்புக்கு முன் தோன்றும் அறிகுறிகள்! கவனமா இருங்க..!




நமது ஒட்டுமொத்த உடலிலும் சிறுநீரகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அவை சரியாகச் செயல்படாவிட்டால் நம்மால் உயிர்வாழ முடியாது.. ஏனெனில், அவை உடலில் உள்ள கழிவுகளை அகற்றி ரத்தத்தைச் சுத்திகரிக்கின்றன. இருப்பினும், சிறுநீரகங்கள் செயலிழக்கத் தொடங்கும் முன்பே உடலில் சில மாற்றங்கள் தென்படும். இந்த அறிகுறிகளைப் புறக்கணிப்பது சிறுநீரகங்கள் முழுமையாகச் செயலிழக்க வழிவகுக்கலாம். எனவே, சரியான நேரத்தில் இவற்றை அடையாளம் காண்பதன் மூலம் பெரும் பாதிப்பைத் தவிர்க்கலாம். சிறுநீரகங்கள் பாதிக்கப்படுவதற்கு முன் உடலில் தோன்றும் அறிகுறிகள் என்னென்ன என்று பார்ப்போம்.

**சிறுநீரில் ஏற்படும் மாற்றங்கள்:**

சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டால், உடல் வெளிப்படுத்தும் முதல் அறிகுறி சிறுநீரில் தெரியும். சிறுநீரில் நுரை காணப்படுதல், சிறுநீர் கழிக்கும் அளவில் மாற்றம் (அதிகரித்தல் அல்லது குறைதல்), இரவில் அடிக்கடி சிறுநீர் கழித்தல் அல்லது சிறுநீரில் இரத்தம் வெளியேறுதல் போன்றவை சிறுநீரகப் பிரச்சனையின் அறிகுறிகளாக இருக்கலாம். உடலில் புரதம் வெளியேறுதல் அல்லது ரத்தத்தைச் சுத்திகரிப்பதில் ஏற்படும் குறைபாடு ஆகியவற்றால் இந்த அறிகுறிகள் தோன்றுகின்றன.

**கால்கள் மற்றும் முகத்தில் வீக்கம்:** சிறுநீரகங்கள் சரியாகச் செயல்படாவிட்டால், உடலில் நீர் தேங்கத் தொடங்கும். இதனால் பாதங்கள், கணுக்கால்கள், கைகள் அல்லது முகத்தில் வீக்கம் ஏற்படலாம். காலையில் எழுந்திருக்கும்போது கண்களுக்குக் கீழே வீக்கம் தென்பட்டால் கவனமாக இருக்கவும்.

எப்போதும் பலவீனமாக உணர்தல்: சிறுநீரகச் செயலிழப்பால் இரத்தத்தில் கழிவுகள் தேங்கலாம், இது சோர்வை உண்டாக்கும். நன்றாகத் தூங்கிய பிறகும் கூட சோர்வாகவோ அல்லது மந்தமாகவோ உணர்வது ஒரு அறிகுறியாக இருக்கலாம்.

**தோலில் அரிப்பு மற்றும் பசியின்மை:** ரத்தத்தில் நச்சுத்தன்மை அதிகரிப்பதால் தோலில் அரிப்பு ஏற்படலாம்; அத்துடன் குமட்டல், வாந்தி அல்லது பசியின்மை போன்றவையும் பொதுவான அறிகுறிகளாகும். எனவே, இத்தகைய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகவும்.

**அதிகம் படிக்கப்பட்டவை:** உங்கள் மைக்ரோவேவ் (micro–wave) எண்ணெய் பிசுபிசுப்புடன் உள்ளதா? சமையலறையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே சில நொடிகளில் அதைச் சுத்தப்படுத்திப் புதிது போல மாற்றலாம். அதை எப்படிச் செய்வது?

**அறிகுறிகள் தென்பட்டால் என்ன செய்ய வேண்டும்..?**

இத்தகைய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகவும். மேலும், பிரச்சினையைக் கண்டறிய ரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளை செய்துகொள்ளவும். உயர் ரத்த அழுத்தம் (BP) அல்லது சர்க்கரை நோய் (நீரிழிவு) உள்ளவர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அவர்கள் தங்கள் மருத்துவர்களைத் தொடர்ந்து சந்திக்க வேண்டும். மேலும், அவர்கள் உணவில் உப்பைக் குறைத்து, அதிக நீர் அருந்தி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டும். அன்றாட வாழ்க்கை முறையில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலமும் இந்தப் பிரச்சினையைக் குறைக்கலாம்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பேரூராட்சி கூட்ட அரங்கில் உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, பேரூராட்சி தலைவர் சந்திரகலா தலைமையில், குப்பைகளை நான்கு விதமாக பிரிப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளை வார்டு கவுன்சிலர்கள் ஏற்படுத்துவது குறித்து கலந்துரையாடல் நடந்தது. கூட்டத்தில் கவுன்சிலர்கள், சுகாதார துறை ஆய்வாளர், பணியாளர்கள் கலந்துகொண்டனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் இராஜதானி ஊராட்சியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் ஆய்வு மேற்கொண்டார்.

# கே.என்.நேரு மீது 23-ந்தேதி வரை நடவடிக்கை எடுக்கக்கூடாது - ஐகோர்ட்டு உத்தரவு!

சென்னை, ஜூன். 06–

தி.மு.க., ஆட்சிக்காலத்தில் நகராட்சி நிர்வாகத்துறையில் 2.538 உதவி என்ஜினீயர்கள், இளநிலை என்ஜினீயர்கள் உள்ளிட்ட பணிகளுக்கு நடந்த நியமனங்களில் ரூ.634 கோடி வரை லஞ்சம் பெறப்பட்டு உள்ளதாக குற்றம் சாட்டி தமிழ்நாடு டி.ஜி.பி.க்கு, அமலாக்கத்துறை இயக்குனர் கடிதம் எழுதினார். இந்த கடிதத்தின் அடிப்படையில் நகராட்சித்துறை அமைச்சராக இருந்த கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்ய கோரி சென்னை ஐகோர்ட்டில், அ.தி.மு.க., எம்.பி. இன்பதுரை பொதுநலமனு தாக்கல் செய்தார்.

**கோர்ட்டு அவமதிப்பு வழக்கு**

இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, அமலாக்கத்துறை இயக்குனரின் கடிதத்தின் அடிப்படையில் உடனடியாக வழக்குப்பதிவு செய்ய தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு உத்தரவிட்டது. ஆனால், போலீசார் வழக்குப் பதிவு செய்யாததால், சென்னை ஐகோர்ட்டில் இன்பதுரை கோர்ட்டு அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார். அதேபோல, இந்த வழக்கின் தீர்ப்பை மறுஆய்வு செய்யக்கோரி அரசு தரப்பில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுக்கள் வருகிற 23–ந்தேதி விசாரணைக்கு வரவுள்ள நிலையில், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இதையடுத்து சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு மூத்த வக்கீல் அரவிந்த்பாண்டியன் ஆஜராகி, "மறுஆய்வு மனு நிலுவையில் இருக்கும்போது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதற்கு முன்பு (தி.மு.க., ஆட்சி க்காலத்தில்) அட்வகேட் ஜெனரலாக இருந்த பி.எஸ்.ராமன் மறுஆய்வு மனுக்கள், கோர்ட்டு அவமதிப்பு வழக்கு மனுக்கள் மீதான விசாரணைக்கு வரும் வரை எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என்று இந்த ஐகோர்ட்டில் ஏற்கனவே உத்தரவாதம் அளித்திருந்தார்" என்றார்.

அதற்கு நீதிபதிகள், அட்வகேட் ஜெனரல் ஏற்கனவே உத்தரவாதம் அளித்த பின்னர், போலீசார் எப்படி இதுபோல நடவடிக்கை எடுத்தனர்?" என்று கேள்வி எழுப்பினர்.



அரசு தரப்பில் ஆஜரான அட்வகேட் ஜெனரல் விஜய் நாராயண், "நகராட்சி பணி நியமனங்களில் கோடிக்கணக்கில் முறைகேடு நடந்துள்ளதாக அமலாக்கத்துறை ஆதாரப்பூர்வமாக அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் முன்னாள் அமைச்சரான கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் இன்று (நேற்று) காலையில் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

ஆனால், அந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) தற்போது என்னிடம் இல்லை. முன்னாள் அட்வகேட் ஜெனரல் இந்த ஐகோர்ட்டுக்கு அளித்த உத்தரவாதம் குறித்த விவரம் எனக்கு தெரியாது. வழக்குப்பதிவு செய்யவேண்டும் என்ற இந்த ஐகோர்ட்டு உத்தரவுக்கு தடை எதுவும் இதுவரை இல்லாததால், அந்த உத்தரவின் அடிப்படையிலேயே போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்" என்றார்.

**நடவடிக்கை கூடாது**

இதையடுத்து நீதிபதிகள், "சீராய்வு மனுக்கள், கோர்ட்டு அவமதிப்பு வழக்கு ஆகியவை வருகிற 23–ந்தேதி இந்த ஐகோர்ட்டில் விசாரணைக்கு வரவுள்ளது. எனவே, லஞ்ச ஒழிப்பு போலீசார் பதிவு செய்துள்ள வழக்கின் அடிப்படையில் வருகிற 23–ந்தேதி வரை மேல்நடவடிக்கை எடுக்காமல் நிறுத்தி வைப்பதால், அரசுக்கு எந்த பாதிப்பும் வரப்போவது இல்லை.

**23–ந்தேதி விசாரணை**

முன்னாள் அட்வகேட் ஜெனரல் அளித்த உத்தரவாதத்தின் அடிப்படையிலும், தற்போது பதிவு செய்துள்ள வழக்கின் அடிப்படையிலும், எந்த ஒரு நபர் மீதும் வருகிற 23–ந்தேதி வரை போலீசார் நடவடிக்கை எதுவும் எடுக்கக்கூடாது. அனைத்து வழக்குகளையும் வருகிற 23–ந்தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்" என்று உத்தரவிட்டனர்.

# டெல்லி தீ விபத்துகளில் 543 பேர் பலி; அதிர்ச்சி தகவல்!

புதுடெல்லி, ஜூன். 06–

டெல்லி மாளவியா நகரில் உள்ள உணவு விடுதி



ஒன்றில் சமீபத்தில் தீ விபத்து ஏற்பட்டது. இதில் 21 பேர் பலியானார்கள். 25 பேர் காயமடைந்தனர். அவர்களில் பலர் மத்திய ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளை சேர்ந்தவர்கள் என தகவல் தெரிவிக்கின்றது.

இதேபோன்று, விவேக் விஹார் மற்றும் பாலம் பகுதிகளில் தலா 9 பேர் தீ விபத்தில் உயிரிழந்து உள்ளனர். இந்த நிலையில், டெல்லி அரசு வெளியிட்டு உள்ள செய்தியில், 2019 முதல் 2026 மார்ச் வரையிலான ஆண்டுகளில் 543 பேர் பலியாகி உள்ளனர்.

இதில், இந்த ஆண்டின் முதல் பாதியில் 65 பேர் பலியாகி உள்ளனர். இந்த தீ விபத்துகளில் 2019–ம் ஆண்டில் அனாஜ் மண்டியில் ஏற்பட்ட தீ விபத்தில் 44 பேர் உயிரிழந்ததே அதிக அளவாகும். அதற்கு முன் 1997–ம் ஆண்டில் உபஹார் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 59 பேர் உயிரிழந்ததே அதிக அளவாக இருந்தது.

இதேபோன்று, 2019–ம் ஆண்டில் இருந்து 2025–ம் ஆண்டு வரை தீ விபத்துகளில் சிக்கி 4,403 பேர் காயமடைந்து உள்ளனர்.



தற்போது JM5 நீதிபதியின் தன்னிச்சையான போக்கிற்கு எதிரான கண்டனப் பேரணி மற்றும் போராட்டத்தின் போது மதுரை உயர்நீதிமன்றத்தில் மதுரை வழக்கறிஞர் செயலாளர் திரு.மோகன்குமார் அவர்கள் மயங்கிய நிலையில் உயர் நீதிமன்றம் மருத்துவமனையில் மயக்க நிலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.



அண்ணாமலை ஐபிஎஸ் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, பழனி கனகராஜ் அவர்களின் ஆலோசனைப்படி பழனி அருள்மிகு ஸ்ரீ ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் தங்கரதம் இழுத்து வழிபாடு செய்தனர்..



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் பிச்சம்பட்டி ஊராட்சியில் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நாடகமேடையின் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் பார்வையிட்டார்.




உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மதுரை ரயில்வே நிலையம் சார்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், மதுரை கல்லூரியின் 20 NCC மாணவர்கள் மற்றும் NCC அதிகாரி லெப்டினென்ட் கார்த்திகேயன் பங்கேற்றனர். ரயில் நிலையத்தில் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. சுற்றுச்சூழலை மேம்படுத்த மரக்கன்றுகளும் ரயில்வே நிலைய வளாகத்தில் நடப்பட்டது. நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாட்டை சுகாதார ஆய்வாளர் ஜெனிலா ஏற்பாடு செய்திருந்தார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் பெரியமண்டவாடியைச் சேர்ந்த விஷ்ணு பாரதி அவர்கள் மற்றும் உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த வெள்ளியங்கிரி ஆகிய இருவரும் அன்னதான திட்டத்திற்கு 7 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கும் வைர அட்டைத் திட்டத்தின் கீழ் பழனி திருக்கோயில் இணை ஆணையர் அவர்களிடமிருந்து வைர அட்டை பெற்றுக் கொண்டார்கள். இதுவரை பழனி திருக்கோவில் சார்பாக 27 நன்கொடையாளர்கள் வைர அட்டை பெற்றுள்ளனர்.



பழனி அம்மா உணவகத்தில் தமிழக வெற்றி கழகம் கட்சியினர் முதல்வர் விஜயன் படத்தை மாற்றினர் கட்சி நிர்வாகிகள் டாக்டர் எம் பிரவீன் குமார் ஜேபி எஸ் சஞ்சய் மணி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# வேலை வாய்ப்பு

## "மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்தும் தேசிய பாதுகாப்பு அகாடமி (NDA) மற்றும் கடற்படை அகாடமி சேர்க்கைத் தேர்வு - II, 2026" 451 காலிப்பணியிடங்கள்!

மத்திய அரசின் Union Public Service Commission (UPSC) சார்பில் National Defence Academy (NDA) & Naval Academy Examination (II), 2026 தேர்வுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன் மூலம் இந்திய ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையில் சேர விரும்பும் இளைஞர்களுக்கு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

முக்கிய விவரங்கள்:

பணியிடங்கள்: 451

அமைப்பு: NDA & Naval Academy (II), 2026

விண்ணப்பம் தொடக்கம்: 20 மே 2026

விண்ணப்பிக்க கடைசி தேதி: 09 ஜூன் 2026

தேர்வு தேதி: 13 செப்டம்பர் 2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கல்வித் தகுதி:

Army Wing: 12–ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்வு எழுதுபவர்கள்.

Navy & Air Force Wing: 12–ம் வகுப்பில் இயற்பியல் மற்றும் கணிதம் படித்திருக்க வேண்டும்.

வயது வரம்பு:

திருமணமாகாத ஆண் மற்றும் பெண் விண்ணப்பதாரர்கள்.

UPSC அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட பிறந்த தேதி வரம்புக்குள் இருக்க வேண்டும்.

NDA & Naval Academy Examination (II) 2026–க்கு விண்ணப்பிக்க அதிகாரப்பூர்வ UPSC ஆன்லைன் போர்டலை பயன்படுத்த வேண்டும்.

விண்ணப்ப இணைப்பு:

UPSC Online Application Portal

அதிகாரப்பூர்வ அறிவிப்பு:

UPSC Official Website

# அண்ணாமலையின் புதிய இயக்கத்தை வரவேற்று கொண்டாடிய ஆதரவாளர்கள்!



திருப்பூர், ஜூன். 06–

முன்னாள் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பா.ஜ.க.விலிருந்து விலகி இன்று வீத லீடர்ஸ் என்ற புதிய இயக்கத்தைத் தொடங்கியதைத் தொடர்ந்து, அவரது ஆதரவாளர்கள் திருப்பூரில் இனிப்புகள் வழங்கி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்ணாமலையின் புதிய இயக்கத்திற்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் இருந்து பலர் இணைந்து வருகிறார்கள் மேலும் இந்த புதிய இயக்கத்தை வரவேற்றும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் அதன் ஒரு பகுதியாக திருப்பூர் புதிய பேருந்து நிலையத்தில் 100–க்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் ஒன்று கூடி முழக்கங்கள் எழுப்பினர். மேலும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலையின் ஆதரவாளர்கள், "பா.ஜ.க.வில் அவருடன் இணைந்து பணியாற்றிய நாங்கள், அவர் கட்சியிலிருந்து விலகியதும் நாங்களும் விலகிவிட்டோம். தற்போது அனைவரும் அவரது புதிய இயக்கத்தில் இணைந்துள்ளோம். எதிர்காலத்தில் அவர் அரசியல் கட்சி தொடங்கினால், அதிலும் அவருடன் இணைந்து பணியாற்றுவோம்" என்றனர். மேலும், "திருப்பூரில் இளைஞர்கள், பெண்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இந்த இயக்கத்தில் இணைய ஆர்வம் காட்டி வருகின்றனர். பா.ஜ.க. அண்ணாமலையின் உழைப்பையும் பங்களிப்பையும் மதிக்கத் தவறிவிட்டது. அவருக்கு உரிய மதிப்பு அளிக்கப்படாத காரணத்தால்தான் அவர் அந்தக் கட்சியிலிருந்து விலகியுள்ளார். அவரைத் தொடர்ந்து நாங்களும் வெளியேறியுள்ளோம். இன்னும் சில நாட்களில் பல நிர்வாகிகளும் இந்த இயக்கத்தில் இணைய உள்ளனர்" என்று தெரிவித்தனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்

பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881



# சகாராவில் பேரதிர்ச்சி..! தண்ணீர் இல்லாமல் 49 பேர் உயிரிழப்பு..!

சகாரா, ஜூன். 06–

சகாரா பாலைவனத்தில் தண்ணீர் கிடைக்காமல் 49 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நைஜர் நாட்டின் வடக்கு பகுதியில் இந்த சோகம் நிகழ்ந்துள்ளது. மாலி நாட்டிலிருந்து மத விழாவில் பங்கேற்று சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த பயணிகள் சென்ற லாரி திடீரென பழுதடைந்தது.




இதனால் பாலைவனத்தின் நடுப்பகுதியில் சிக்கித் தவித்த அவர்கள் பல நாட்கள் குடிநீர் இல்லாமல் போராடினர். கடும் வெப்பம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறையால் 49 பேர் உயிரிழந்தனர். இருவர் மட்டும் 50 கிலோமீட்டருக்கும் மேல் நடந்து சென்று உதவி கோரியதால் இந்த சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது. பின்னர் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று நடவடிக்கை மேற்கொண்டனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் அங்கிருந்தே அடக்கம் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் உலகம் முழுவதும் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

# கட்சி தொடங்கும் அண்ணாமலை - பாஜக அவசர ஆலோசனை!

புதுடெல்லி, ஜூன். 06–

பா.ஜ.க.வில் இருந்து விலகிய அண்ணாமலை புதிய அரசியல் கட்சியை தொடங்குவதாகவும், அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் அண்ணாமலை கட்சியில் நேற்று ஒரே நாளில் சுமார் 10லட்சத்துக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளனர். இது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும், பா.ஜ.க.வில் இருந்து




அண்ணாமலை விலகியதை தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள் பலரும் பா.ஜ.க.வில் இருந்து விலகி வருகின்றனர்.

இந்த நிலையில், புதிய கட்சி தொடங்குவதாக அண்ணாமலை அறிவித்துள்ள சூழலில் நாளை மறுநாள் பா.ஜ.க. மாவட்டத் தலைவர்கள் கூட்டம் நடைபெறுகிறது. திருச்சியில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்குமாறு மாநில நிர்வாகிகளுக்கு தொலைபேசி வாயிலாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டத்தில் பங்கேற்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக பா.ஜ.க. எச்சரித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# தீவிரமடையும் தென்மேற்கு பருவமழை - மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கொட்டி தீர்த்த மழை!

சென்னை, ஜூன். 06–

ஜூன் 5–ம் தேதி தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்த நிலையில், மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கனமழை வெளுத்து வாங்கியது. கேரளா, நீலகிரி, கோவை, தேனி உள்ளிட்ட மலை மற்றும் அடிவாரப் பகுதிகளில் பல மணி நேரம் இடைவிடாது மழை பெய்தது.




இதன் காரணமாக ஆறுகள், ஓடைகள் மற்றும் நீர்வீழ்ச்சிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. சில இடங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மலைப்பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கனமழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ள நிலையில், பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். அடுத்த சில நாட்களும் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் கனமழை தொடரும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# லிட்டருக்கு குறைந்த விலை..! புதிய பெட்ரோல் அறிமுகம்..!!

புதுடெல்லி, ஜூன். 06–

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, இந்தியன் ஆயில் பெட்ரோல் நிலையம் ஒன்றில் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி E85 எரிபொருளை அறிமுகப்படுத்தினார்




'ஃப்ளெக்ஸ்–ஃப்யூவல்' (flex–fuel) வாகனங்களுக்காக, சாதாரண பெட்ரோலை விட லிட்டருக்கு ரூ. 20 குறைவான விலையில், அதிக எத்தனால் கலவை கொண்ட E85 எரிபொருளை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த எரிபொருள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெட்ரோல் நிலையங்களில் மட்டுமே கிடைக்கும். இது ஃப்ளெக்ஸ்–ஃப்யூவல் என்ஜின்கள் கொண்ட வாகனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட முடியும்.

நாடு முழுவதும் உள்ள 48 பொதுத்துறை பெட்ரோல் நிலையங்களில் இந்த எரிபொருள் விற்பனை செய்யப்படும். டிசம்பர் 2026–க்குள் 500 பெட்ரோல் நிலையங்களுக்கும், டிசம்பர் 2027–க்குள் சுமார் 5,000 பெட்ரோல் நிலையங்களுக்கும் இதன் விநியோகத்தை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது சாதாரண பெட்ரோலில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

E85 எரிபொருளில் 80–85 சதவீதம் எத்தனாலும், 14–19 சதவீதம் பெட்ரோலும் உள்ளன. இருப்பினும், E20 முதல் E100 வரையிலான பல்வேறு எரிபொருள் கலவைகளில் இயங்கக்கூடிய திறன் கொண்ட ஃப்ளெக்ஸ்–ஃப்யூவல் வாகனங்களில் மட்டுமே இதைப் பயன்படுத்த முடியும்.

இவ்வகையான வாகனங்களில் மேம்பட்ட என்ஜின் கட்டுப்பாட்டு அலகு (ECU) பொருத்தப்பட்டுள்ளது; இது பெட்ரோலில் உள்ள எத்தனால் அளவின் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் திறன் கொண்டது. E85 உள்கட்டமைப்பின் விரிவாக்கம், 2030–31 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் மொத்த எத்தனால் கலவை அளவை சுமார் 26 சதவீதமாக உயர்த்த உதவும் என்று பூரி கூறினார். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எத்தனாலின் பலன்கள் நேரடியாக நுகர்வோருக்குச் சென்றடைவதை உறுதிசெய்யும் வகையில், சாதாரண பெட்ரோலை விட E85–ன் விலை லிட்டருக்கு சுமார் ரூ. 20 குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மின் வாரிய ஹார்ட் டிஸ்க் திருட்டு: கைது 2/ விற்பனை அம்பலம்!

சென்னை, ஜூன். 06–

தமிழக மின்சார வாரிய தலைமையகத்தில் இருந்து ஹார்டு டிஸ்க்குகள் திருட்டு சம்பவத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 34 ஹார்டு டிஸ்க்குகள் மீட்கப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர்.




தமிழக மின் வாரியத்தில், 'டிரான்ஸ்பார்மர்'கள் கொள்முதலில் நடந்த, 397 கோடி ரூபாய் முறைகேடு குறித்து, சி.பி.ஐ., அதிகாரிகள் வழக்கு பதிந்துள்ள நிலையில், மின் வாரிய தலைமை அலுவலகத்தில், டெண்டர் ஆவணங்கள் இடம் பெற்ற'ஹார்டு டிஸ்க்'குகள் திருடப்பட்டு உள்ளன.

கடந்த மாதம், 20ம் தேதி, இதைக் கண்டறிந்த பொறியாளர் மலர்விழி, தன் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். மின் வாரிய அதிகாரிகள் நடத்திய விசாரணையில், மே, 16 மற்றும், 17 ஆகிய வார இறுதி நாட்களில், குறைந்த அளவு ஊழியர்கள் பணியில் இருந்த போது, ஹார்டு டிஸ்க் திருடப்பட்டிருப்பது தெரியவந்தது.

இது குறித்து போலீசில் புகார் அளிக்கப்பட்டு உள்ளது. இந்தத் திருட்டுகள் மே மாதம், இது இரண்டு நாட்களுக்கு முன்புதான் வெளிச்சத்திற்கு வந்தது. இந்த வழக்கில் இருவர் கைது செய்யப்பட்டனர். ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அருகே உள்ள வளர்புரத்தைச் சேர்ந்த 31 வயதான கோபிநாத் மற்றும் முரளி மனோகர் என அடையாளம் காணப்பட்டனர்.

தமிழக மின்சார வாரியத் தலைமையகத்திலிருந்து ஹார்டு டிஸ்க்குகளை திருடிய இடைத்தரகராக கோபிநாத்தையும், அவற்றை வாங்கிய பெறுநராக முரளி மனோகரையும் போலீசார் கைது செய்து விசாரிக்கின்றனர். இது குறித்து போலீசார் கூறியதாவது: கோபிநாத் மே 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமையகத்திலிருந்து 34 ஹார்டு டிஸ்க்குகளைத் திருடியுள்ளார்.

பின்னர், அவர் அந்த சாதனங்களைத் தனது இல்லத்தில் வைத்து, அவற்றை பார்மட் செய்து, தரவுகளை அழித்த பிறகு பெங்களூருக்குக் கொண்டு சென்றுள்ளார். தலா ரூ.20,000 மதிப்புள்ள ஹார்டு டிஸ்க்குகள், ஒவ்வொன்றும் ரூ.2,500க்கு விற்கப்பட்டன. தற்போது 34 ஹார்டு டிஸ்க்குகள் மீட்கப்பட்டுள்ளது.


மின்சார வாரியம் தொடர்பான கொள்முதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்களின் தொடர்பு குறித்தும் விசாரணை நடக்கிறது. இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்.

இந்த விசாரணை தமிழகத்தைத் தாண்டி விரிவடைந்துள்ளதாலும், இதில் பல்வேறு இடங்களைச் சேர்ந்த சந்தேக நபர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாலும், இந்த வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றுவது குறித்து போலீசார் பரிசீலித்து வருகின்றனர். இதற்கிடையில், கோபிநாத் எழும்பூரில் உள்ள மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார். முரளி மனோகரும் காவலில் எடுக்கப்பட்டார். விசாரணை நடைபெற்று வருகிறது.

# பலருக்கும் தெரியாத அண்ணாமலையின் இயற்பெயர்..!

புதுடெல்லி, ஜூன். 06–

பாஜகவிலிருந்து விலகி புதிய அரசியல் இயக்கத்தைத் தொடங்கியுள்ள கே. அண்ணாமலை செய்திகளில் முக்கிய இடம்பிடித்துள்ள நிலையில், அவரது ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான தகவல் மீண்டும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.. இன்று லட்சக்கணக்கான மக்களால் அறியப்படும் பெயருடன் அவர் பிறக்கவில்லை. தமிழக பாஜகவின் முன்னாள் தலைவரான அண்ணாமலையின் உண்மையான பெயர், 'சிவ செந்தில் குமார்' என்பது.. எனினும் அவர் பொது வாழ்க்கையில் நுழைவதற்கு வெகு காலத்திற்கு முன்பே, பள்ளிப் பருவத்திலேயே அவர் தனது பெயரை மாற்றிக்கொண்டதாகக் கூறப்படுகிறது.




அண்ணாமலை 10–ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது புதிய பெயரை ஏற்றுக்கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவரது இயற்பெயரான 'சிவ செந்தில் குமார்' நீளமாக இருந்ததால், அதிலிருந்து மாறுபட்டு, சுருக்கமான மற்றும் தனித்துவமான அடையாளத்தைத் தேர்ந்தெடுக்க அவர் விரும்பியதால் அவர் தனது பெயரை மாற்றிக் கொண்டார்.. சிவபெருமானுடன் தொடர்புடைய பெயராக இருந்ததால் அவர் 'அண்ணாமலை' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்ததாகக் கூறப்படுகிறது..

பெயர் மாற்றம் என்பது பின்னர் அவரது தனிப்பட்ட அடையாளத்தின் (personal brand) ஒரு பகுதியாக மாறி, பொது வாழ்க்கையில் அவரைத் தனித்துக்காட்ட உதவியது. கரூர் மாவட்டத்தில் பிறந்த அண்ணாமலை, பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரியில் (PSG College of Technol–ogy) பொறியியல் பயின்றார், பின்னர் ஐ.ஐ.எம். லக்னோவில் (IIM Lucknow) எம்.பி.ஏ. (MBA) படிப்பை முடித்தார். அதன்பிறகு யு.பி.எஸ்.சி. (UPSC) தேர்வில் தேர்ச்சி பெற்று, 2011–ஆம் ஆண்டு தொகுதியில் இந்தியக் காவல் பணியில் (IPS) இணைந்து கர்நாடகாவில் பணியாற்றினார்.

கர்நாடகாவில் காவல் அதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில், அண்ணாமலை தனது துணிச்சலான மற்றும் கண்டிப்பான காவல் பணி பாணிக்காகப் பெயர் பெற்றார். அவரது ஆதரவாளர்கள் அவரை 'கர்நாடகாவின் சிங்கம்' என்று அழைத்தனர்..

சிங்கம் படத்தில் வரும் 'துரைசிங்கம்' என்ற காவல் அதிகாரிக் கதாபாத்திரத்துடன் அண்ணாமலையை ஒப்பிட்டு சிங்கம் என்றே அழைத்தனர்.. இதனால் அவருக்கு 'சிங்கம் அண்ணாமலை' என்ற புனைபெயரும் கிடைத்தது.

2019–இல் ஐ.பி.எஸ். பணியிலிருந்து விலகிய பிறகு அரசியலில் நுழைந்த அவர், பாஜகவில் மிக முக்கியமான முகமாக திகழ்ந்தார். திராவிடக் கட்சிகளின் ஆதிக்கம் பாரம்பரியமாக இருந்து வரும் தமிழ்நாட்டில், பாஜகவின் செல்வாக்கை விரிவுபடுத்த அவரது மாநிலத் தலைவர் பதவிக்காலம் உதவியது.

தற்போது, பாஜகவிலிருந்து விலகி புதிய அரசியல் இயக்கத்தைத் தொடங்கியுள்ள அண்ணாமலை, மீண்டும் ஒருமுறை தன்னைத்தானே புதிய வடிவில் மாற்றிக்கொள்ள முயற்சித்து வருகிறார்.. அவரின் முயற்சி எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்..!

# என் பள்ளி என் கல்வி விழிப்புணர்வு பிரச்சாரம்!



ஒட்டன்சத்திரம், ஜூன். 06–

திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை, குஜிலியம்பாறை ஆகிய வட்டாரங்களில் திண்டுக்கல் ஹோப் நிறுவனத்தின் சார்பாக என் பள்ளி என் கல்வி விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஹோப் நிறுவனத்தின் தலைவர் என்.பழனிச்சாமி குஜிலியம்பாறையில் துவக்கி வைத்தார். தொடர்ந்து உல்லியக்கோட்டையில் ஹோப் நிறுவன அமைப்பாளர் ஜி.மகாலட்சுமி, ஹோப் நிறுவனத்தலைவர் என்.பழனிச்சாமி ஆகியோர் என் பள்ளி என் கல்வி விழிப்புணர்வு திட்டத்தை துவக்கி வைத்து முதல் வகுப்பில் சேரும் 10 குழந்தைகளை பள்ளியில் சேர்த்தார்கள்.

பள்ளி குழந்தைகள் இடைநிற்காமல் படிக்க வேண்டும் என்று கூறினார்கள். தொடர்ந்து வடுகம்பாடியில் என் பள்ளி என் கல்வி திட்டத்தை ஹோப் நிறுவன ஒருங்கிணைப்பாளர் எம்.மகாலட்சுமி தொடங்கி வைத்தார். கருத்தா மோடிவேஷன் சென்டர் தலைவி மற்றும் ஆசிரியர் பங்கேற்று கல்வியின் முக்கித்துவத்தை விளக்கி கூறினார்கள்.

வடமதுரை ஒன்றியத்தில் புத்தூர் பகுதியில் மணிமாறன் தலைமையில் என் பள்ளி என் கல்வி திட்டப் பிரச்சாரம் தொடங்கி வைக்கப்பட்டது.

# உலக சுற்றுச்சூழல் தினம்; வனத்துறை விழிப்புணர்வு!




தேனி, ஜூன். 06–

தேனி மாவட்ட வன அலுவலர் கிரண் அறிவுறுத்தலின் கீழ் ஆண்டிபட்டி வனச்சரக அலுவலர் அருள்குமார் தலைமையில், "உலக சுற்றுச்சூழல்" தினத்தை அனுசரிக்கும் வகையில் ஆண்டிபட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வனச்சரகம் சார்பாக பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு 400 இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. அதனை அடுத்து மாணவர்கள் மரக்கன்றுகளை கையில் ஏந்தி காலநிலை மாற்றத் தணிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.அதன் பின்பு பள்ளி மைதானத்தில் மரக்கன்றுகளை கையில் ஏந்தி "SAVE OUR PLANET" என்ற எழுத்துரு வடிவில் நின்று பருவநிலை மாற்றத்தைத் தணிப்பதில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை வெளிப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சிக்கு பாரத ஸ்டேட் வங்கி மேலாளர் லோகேஷ் குமார் ஆதரவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமையாசிரியர் ரங்கராஜன் முன்னிலை வகித்தார், மேலும் ஆசிரியர்கள் மற்றும் வனப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# UPI பயன்பாடு உச்சம்: நாடு முழுவதும் ஏடிஎம்கள் மூடல்..?




புதுடெல்லி, ஜூன். 06–


தற்போது, UPI பரிவர்த்தனைகளின் பெருக்கத்தால் ஏடிஎம் (ATM) பயன்பாடு குறைந்துள்ளது.

ஏடிஎம்களின் பயன்பாடும் படிப்படியாகக் குறைந்து வருகிறது. இது இயக்குபவர்களின் வருமானத்தைக் குறைப்பதோடு, செயல்பாட்டுச் செலவுகளையும் அதிகரிக்கிறது. இச்சூழலில், வரும் நாட்களில் ஏடிஎம்களில் பணத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று 'ஏடிஎம் தொழில் கூட்டமைப்பு' (Confeder–ation of ATM Industry CATM) எச்சரித்துள்ளது.

ஏடிஎம்களுக்குப் பணத்தைக் கொண்டு செல்லும் நிறுவனங்கள் மற்றும் இயக்குபவர்களை இக்கூட்டமைப்பு பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஏடிஎம்களில் நிரப்பப்படும் பணத்தின் அளவு பெருமளவு குறைந்துள்ளதாக இக்கூட்டமைப்பு சமீபத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

CATM அறிக்கையின்படி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஏடிஎம்களுக்கு ரூ. 94,000 கோடி மதிப்பிலான பணம் தேவைப்பட்டது. மார்ச் மாதத்தில் ரூ. 61,000 கோடியும், ஏப்ரல் மாதத்தில் ரூ. 54,000 கோடியும் மட்டுமே கிடைத்தது. இந்திய வங்கிகள் சங்கத்திடம் (Indian Banks Association) CATM வழங்கிய தரவுகளின்படி, மார்ச் மாதத்தில் ஏடிஎம் இயக்குபவர்களுக்குத் தேவையான பணத்தில் 64 சதவீதம் மட்டுமே கிடைத்தது.

ஏப்ரல் மாதத்தில், அவர்களுக்குத் தேவையான பணத்தில் 57 சதவீதம் மட்டுமே கிடைத்தது. பணம் கையிருப்பில் இருந்தாலும், ஏடிஎம்களில் அதை நிரப்புவதில் அவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இது வரும் நாட்களில் ஏடிஎம்கள் மூடப்படுவதற்கு வழிவகுக்கக்கூடும் என்று வணிகத் துறை வட்டாரங்கள் எச்சரிக்கின்றன. பணத்தை நிரப்புவதில் உள்ள சிரமங்களால் ஏடிஎம் சேவைகள் நிறுத்தப்படலாம் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.



# சினிமா துளிகள்..!




**'பரிமளா அன்ட் கோ' (ஜூன் 5) திரையரங்குகளில் வெளியீடு**

Parimala and Co திரைப்படம் இன்று வெளியாகியுள்ளது. குடும்பம் மற்றும் கொலை மர்மத்தை மையமாகக் கொண்ட டார்க் காமெடி படமாக இது உருவாகியுள்ளது.

**மாரி செல்வராஜின் புதிய படம் 'மஞ்சநத்தி' அறிவிப்பு**

இயக்குநர் Mari Selvaraj தனது 6–வது படமான Man–janathi–யை அறிவித்துள்ளார். இசையமைப்பாளர் Ilaiyaraa–ja முதல் முறையாக மாரி செல்வராஜுடன் இணைகிறார்.

**'ஜன நாயகன்' ரிலீஸ் தள்ளிப்போகுமா?**

Vijay நடித்துவரும் Jana Nayagan திரைப்படம் ஜூன் 19–ம் தேதி வெளியாகுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதிகாரப்பூர்வ அறிவிப்புக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

**'நூறு சாமி' ஜூன் 19 ரிலீஸ் உறுதி**

Vijay Antony நடித்த Nooru Saamy திரைப்படம் ஜூன் 19–ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'கருப்பு' படத்தின் வசூல் வேட்டை தொடர்கிறது

Karuppu திரைப்படம் கோடைக்கால பாக்ஸ் ஆபிஸில் சிறப்பான வரவேற்பைப் பெற்று வசூல் சாதனை படைத்து வருகிறது.

**'கார்மேனி செல்வம்' OTT வெளியீடு உறுதி**

Carmeni Selvam திரைப்படத்தின் OTT வெளியீட்டு தேதி உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜூன் மாத தொடக்கத்தில் பரிமளா அன்ட் கோ ரிலீஸ், மாரி செல்வராஜின் புதிய பட அறிவிப்பு, ஜன நாயகன் ரிலீஸ் அப்டேட், நூறு சாமி வெளியீடு, கருப்பு வசூல் சாதனை ஆகியவை கோலிவுட்டில் அதிகம் பேசப்படும் செய்திகளாக உள்ளன.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020